# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 30 புதன்கிழமை 12.06.2024 கதிர் 225



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# அரசின் பயணத்தை மாற்றினால் மீண்டும் வரிசை யுகம்தான் வரும்


## ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்ட வெற்றி, தோல்வி அன்றி நாட்டினது நிலையே தீர்மானிக்கப்படும் என்கிறார் ரணில்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனது தனிப்பட்ட வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படாது என்றும் மாறாக நாட்டின் வெற்றி, தோல்வியே தீர்மானிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முடியும் என்ற திருப்தி மக்களுக்கு இருக்குமாயின் அந்த வேலைத் திட்டத்துடன் முன்னேறிச் செல்ல முடியும் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால், நாட்டு மக்கள் மீண்டும் மருந்து, உரம், எரிவாயு, எரிபொருள் வரிசைகளில் நிற்க நேரிடும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லை வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற பொருளாதார மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று அரசியல் மேடைகளில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கும் குழுவினரிடம் நாட்டின் முன்னேற்றத்திற்கான எந்தவொரு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டமும் இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேர்தல்களின் போது நபர்களை பார்த்து தீர்மானம் எடுக்கும் கடந்த கால அரசியல் தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார். 2▶



# போர் முடிந்து 15 வருடங்களாகியும் வடக்கில் அபிவிருத்தி இல்லையே

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை



"யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார, சமூக மற்றும் வாழ்வாதாரத பரப்புகளில் சாதகமான முன்னேற்றத்தை அடையவில்லை. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 233 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம், மானிப்பாய் புனித. ஹென்றியரசர் கல்லூரிக்கு வழங்கி 2▶

# நாட்டின் தலைவரை தெரிவு செய்வதற்காக புதியதை 'டெஸ்டிங்' செய்வதில் பயனில்லை!

## கோட்டபாய மூலம் பாடம் கற்றோம் என்கிறார் சாமர சம்பத் எம்.பி.

'புதியவற்றை 'டெஸ்டிங் ' செய்வதில் எந்தப் பயனும் இல்லை. இப்போது டெஸ்டிங் காலம் முடிந்துவிட்டது. கடந்த முறை கோட்டபாயவை டெஸ்டிங்கு கொண்டு வந்தமை நாட்டையே அழிவிற்கு கொண்டு சென்றது' இவ்வாறு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

வெலிமடை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அங்கு இராஜாங்க அமைச்சர் மேலும் கூறும்போது, "மைத்திரிபால சிறிசேன பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரிடம் அதுபற்றி கேளுங்கள். கூட்டணியை புதிதாக தொடங்கியுள்ளோம். இன்னும் கூட்டணி முழுமைப் படவில்லை. இந்த கூட்டணியின் முதல் கூட்டமே சமீபத்தில் நடைபெற்றது. முழுமையாக கூட்டணி அமைத்து அதன் புதிய வேலைத்திட்டம் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

அரசியல் செய்வதற்கு முதலில் நாடு என்ற ஒன்று இருக்க வேண்டும். அண்மைக் காலத்தில் சவப்பெட்டியையோ, சடலத்தையோ எடுத்துச் செல்வதற்கு



வாகனத்திற்கு பெற்றோல் கூட பெற முடியாத நிலை நாட்டில் இருந்தது. மக்கள் வாழக்கூட முடியாத நிலையில் இருந்தனர். எனவே, நாட்டை கட்டியெழுப்புவதே முதலாவது நோக்கமாக இருக்க வேண்டும். அரசியல் இரண்டாவது பட்சமாகும்.

அந்தவகையில், ஜனாதிபதியும் நாங்களும் இருவேறு அரசியல் கருத்துக்களில் இருந்தவர்கள். ஆனால், நாங்கள் அரசியல் கருத்து பேதங்களை ஒதுக்கி வைத்து விட்டு நாட்டின் நலன் குறித்து சிந்தித்து 2▶

# வெள்ளப்பெருக்கினால் இறந்த கோழிகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன!

## அவதானம் தேவை என்கிறது நுகர்வோர் விவகார அதிகார சபை

இன்றைய நாட்களில் சந்தையில் கோழி இறைச்சியை கொள்வனவு செய்வதில் அதிக கவனம் செலுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக சந்தையில் இறந்த கோழிகள் விற்பனை செய்யப்படுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சோதனைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சஞ்சய் இரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கோழி இறைச்சியை உட்கொள்வது உடலுக்கு தீங்கு விளைவிப்பதால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், இது தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருப்பின் நுகர்வோர் விவகார அதி காரசபையுடன் 1977 இலக்கத்தில் தொலைபேசியில் அறிவிக்குமாறும் அதிகாரசபை கேட்டுக் கொண்டுள்ளது. (ரென-34)

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைந்தால் எம்.பி.க்களின் ஓய்வூதிய முறை ஒழிக்கப்படும்

## தே.ம.சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி



நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய முறையை இல்லாதொழிப்பதற்கு தமது அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அநுராதபுரம் தம்புத்தேகம வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் தமது அரசாங்கத்தின் முதல் 2▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தபால் ஊழியர்கள் இன்று நள்ளிரவு தொடக்கம் தொழிற்சங்கப் போராட்டம்

தபால் ஊழியர்கள் இன்று நள்ளிரவு முதல் சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஊழியர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளது என்று ஒன்றிணைந்த தபால் சேவை தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார். (05)

# இலண்டன் பறக்கின்றார் அநுர



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாளை (13) இலண்டனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி இலண்டனில் நடைபெறும் கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கின்றார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பிரிட்டனின் முக்கிய சில அரசியல் பிரமுகர்களையும் இந்த விஜயத்தின்போது அநுரகுமார சந்தித்துப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

## தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையாக வீண் விரயம், ஊழல் ஆகியவற்றை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மக்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பணத்தை மீட்டெடுப்பதற்கு, ஏற்கனவே அமுலிலுள்ள ஊழல் தடுப்புச் சட்டம், லஞ்சம் அல்லது ஊழல் சட்டம் ஆகியனவற்றை பயன்படுத்தப்படும் அல்லாவிடில் பொருத்தமான புதிய சட்டங்களை இயற்றியாவது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு செலுத்தாத வரிகள் ஒரு ட்ரில்லியன் ரூபாயைத் தாண்டிவிட்டன, அதில் அரசாங்கம் மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய வரித் தொகை ஆயிரம் பில்லியனுக்கும் அதிகம் எனவும், வெற் வரியாக மொத்தம் 163 மில்லியன் வசூலிக்கப்படாமல் இருப்பதாகவும் அதனை வசூலித்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அதுவே போதுமானதாக இருக்கும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (ரென-33)

## நாட்டின் தலைவரை தெரிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு அன்று உதவினோம். அவரும் நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றினார். அதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எனவே, இன்றும் அதற்காக தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம்" - என்று குறிப்பிட்டார். (ரென-35)

## போர் முடிந்து 15 ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

"வடக்கு மாகாணத்தில் மக்களை மையப்படுத்திய பாரிய அபிவிருத்தியொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றது. இது மக்களை முன்னிலைப்படுத்திய பங்கேற்பு அபிவிருத்தியின் ஒரு வடிவமாக அமைந்து காணப்படும். இதன் மூலம் கிராமத்தைக் கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பக்க பலம் கிடைக்கும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு குறிப்பிட்டார்.

"இதற்கு, அறிவு சார்ந்த பொருளாதாரம், ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர வேண்டும். தகவல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்த தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவைப்பாடு நாட்டில் இன்று எழுந்துள்ளது." - என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

"யாழ். மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் பூங்காக்களை அமைத்து, அபிவிருத்தியை நடைமுறை ரீதியாக முன்னெடுப்போம். இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (05)

## அரசின் பயணத்தை மாற்றினால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தை நிறைவேற்ற ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதற்கு மாறாக நாட்டின் முன்னேற்றத்துக்கான வேறு திட்டங்களை வைத்துள்ளவர்கள் அதனை நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இன்று துறைசார் மேற்பார்வை குழு அங்கத்தவர்களாகவே இங்கு வந்துள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவே வழங்கியிருந்தார். இதனால் இளைஞர், யுவதிகள் நாட்டின் முன்னேற்றத்துக்கான தங்களது யோசனைகளை வழங்க முடியும். அந்த யோசனைகளை நாமும் செவிமடுப்போம்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுகொள்ளப்போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்சினைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்கு காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துக் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் யுத்தத்துக்கும் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் யுத்தத்திற்கு பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாத வேளையில் கடன் பெற்றுக்கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமல் போனது.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அதற்கான பணிகளை செய்யும் போது நாட்டை விற்கப் போவதாக பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்குரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமான தேவையைக் கருத்தில் கொண்டு 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

அந்த நேரத்தில் கொவிட் தொற்றும் பரவியது. நாட்டுக்கு 3 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு தேவைப்பட்டது. இருப்பினும் பாராளுமன்ற தேர்தல் காலத்தில் ஒருவரும் அது பற்றி பேசவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை பிரகடனத்தில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம். வேறு எவரும் அதுபற்றி பேசவில்லை. அதற்கு மாறாக செய்ய முடியாது என்று அறிந்தும் பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கினர். அதன் பலனாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரேயொரு பாராளுமன்ற ஆசனம் மட்டுமே கிடைத்து.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஓர் ஆசனத்தை வென்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. ஆனால், இலங்கையில் அது நடந்தது. நாட்டின் அரசியல் வங்குரோத்து நிலையே அதற்கு காரணமாகும். நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க எவரும் முன்வரவில்லை. அதனால் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் நாட்டின் இளைஞர் யுவதிகளிடமும் இந்த பொறுப்புக்களை வழங்கி அவர்களுக்கு இது குறித்த தெளிவூட்டல்களை வழங்க நாம் தீர்மானித்தோம். அதன்படியே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. அதனைப் பொறுப்பேற்று நாட்டை முன்னேற்றிச் செல்வதற்காக இளைஞர்கள் தயாராக வேண்டும்.

இன்று அரசியல்வாதிகள் பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றுத்துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை. எதிர்க்கட்சித் தலைவரும் அநுர குமார திசாநாயக்கவும் எந்த இடத்தில் விவாதம் செய்வது என்பது குறித்தே ஒரு மாத காலமாக விவாதித்தனர். இறுதியாக ஒரு விவாதத்திற்கு வரவும் இல்லை. இவர்களில் ஒருவரிடத்திலும் நாட்டின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் இல்லை.

அதனால் அரசாங்கம் கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு மாறான வேறு முறைமைகள் இருக்குமாயின் அதனை அவர்கள் கூற வேண்டும். எவரும் அவ்வாறான திட்டத்தை முன்வைத்திருப்பதாக தெரியவில்லை. உங்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்க அவர்கள் தயாராக இல்லாத பட்சத்தில் உங்களின் எதிர்கால முன்னேற்றத்தை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் மிக அவசியமானது. உங்கள் அறிவு மேம்பாட்டிற்காக ஏனைய அதிகாரிகள் மற்றும் தனியார்துறை பிரதிநிதிகளை சந்திக்கவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். புதிய திட்டங்களை முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டும். பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்"- என்றார். (05)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆசிரியர்களும் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பமும் குறித்த விசேட உரை



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வில் இன்று புதன்கிழமை காலை ஆசிரியரும் செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பமும் என்ற பொருளில் அதிதி உரை இடம்பெற்றது. கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் இந்த உரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவர் ஹலீம் இர்சாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசிரிய மாணவர் உரையை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி பாருக் ஹஸ்நூறில்லா ஆற்றினார். சிறுவர் தொழிலாளர் பற்றி விவரணப் படமும் கலாசாலை ஆசிரிய மாணவரால் தயாரிக்கப்பட்டு சிறுவர் தொழிலாளர் எதிர்ப்புத் தினத்தையொட்டி திரையிடப்பட்டது.

கலாசாலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவா அதிதிக்கான அறிமுகவுரையை ஆற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரையாற்றினார். நிகழ்வுகள் யாவும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உதவிகள்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட குழுவினர் இன்றைய தினம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன் போது ஸ்மாட் வகுப்பறையினைத் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

பாண்ட் வாத்தியத்துடன் வரவேற்புடன் ஆரம்பமான நிகழ்வில் எதிர்கட்சித் தலைவருடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன, அங்கஜன் இராமநாதன் மாவட்ட அமைப்பாளரான கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலைக்கு ஒரு தொகுதி ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்பு அகராதிகளையும், பாடசாலையின் நடன மாணவர்களின் உடைகளுக்காக ஒரு லட்சம் ரூபா பணமும் எதிர்க்கட்சித் தலைவர் வழங்கி வைத்தார். (O1)






# மிதி வெடி




நான் நெடுகக் கத்திற ஒரு விசியம் சரியாப் போயிருக்குது பாருங்கோ…

ஆரா இருந்தாலும் கூட இருக்கிறவை தான் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிறவை எண்டது போன கிழமையும் "ப்றூஃப்" பண்ணுப்பட்டது தெரியும் தானே?

வலக்கை குடுக்கிறது இடக் கைக்குத் தெரியாமல் சிவனே எண்டுசிறப்பாச்செய்துகொண்ணடிருந்த மனுசனைக் கூட இருந்த அல்லக்கையள் எலலாமாச் சேர்ந்து தெருவுக்குக் கொண்டு வந்து விட்டுட்டுதுகள் பாத்தியளோ…?

காசை வச்சுக் கறள் படிய வைக்கிற ஆக்களுக்கு மத்தியில அந்தாள் சரியோ, பிழையோ சத்தமில்லாமல் கனக்கச் செய்தது உண்மை தானே?

சத்தம் சலார் இல்லாமல் முன்னப்பின்ன இருந்த மனுசனை வீடியோக்கு முன்னால ஆடவைச்சது ஆரெண்டு நினைக்கிறியள்? எல்லாம் கூட நிண்டு ஆடிப் பாடுற ஆக்கள் தானாம்!

ஆரம்பத்தில அந்தாளோட தண்ணியடிக்க மட்டும் எண்டு மேசையில குந்திக் கூத்தடிச்சவை நாளாக, நாளாக அந்தாள வெச்சு நல்லா வரும்படி பாத்திருக்கினம்…

வருமானதுக்கு வருமானமுமாகுது, இங்கால பக்கத்தால புட்டியில இருந்து குட்டி வரைக்கும் கைக்குள்ள புழங்கத் தொடங்க, கூட நிக்கிறவைதான் பாட்டுக் கச்சேரியோட பணம் குடுக்கிற "பங்ஷனை" தொடக்கி வைச்சிருக்கினம்!

ஆசை… ஆரைத் தான் விட்டது பாருங்கோ… உந்த வயசில பதினெட்டு வயசுப் பெடியன் போல ஆடுறியள் எண்டு உசுப்பேத்தி.. உசுப்பேத்தி, அந்தாள இப்ப ரணகளமாக்கி விட்டிருக்குதுகள்…

கூட இருந்ததுகளில ஒண்டு கூடச் சரியா இருந்திருந்தா இந்தளவும் வந்திருக்காது பாருங்கோ…

இனியாவது உதை உதாரணமா வைச்சு மற்றவை எண்டாலும் திருந்தினமோ எண்டு பாப்பம்!

நான் நினைக்கேல்ல… திருந்திறதெண்டா மாவையரெல்லாம் போன நாடாளுமன்றத் தேர்தலோட திருந்தியிருக்கவெல்லோ வேணும்…?

மாவிட்டபுரம் அவரை இராப்பகலெண்டு பாராமல் போய் நிண்டு "ஐயா தான் யாழ்ப்பாணத்தில "லீடிங்" எண்டு சொல்லிச் சொல்லியே கட்சிக் காசில சொந்த வியாபரத்துக்கு முதல் போட்ட கனபேர் இப்ப காணாமல் போயிற்றினம். "லீடிங்" எண்டு கனவு கண்ட ஐயா "சீற்" கூடக் கிடையாமல் போயிருக்கிறார். இப்பக் கூட உசுப்பேத்தல் குறையேல்ல… ஆனா உசுப்பேத்திற ஆக்கள் தான் மாறியிருக்கினம்.

கூட்டைக் குறிவைச்சுக் கல்லடிச்சுக் குளப்பினவைக்கு என்னவோ வெற்றிதான்! இப்ப பொது வேட்பாளர் எண்டு வந்து நிக்கினம். அங்கால… பொது வேட்பாளர் வெறும் கோசம் எண்டு ஒரு கூட்டம் நிக்குது… இதில வேடிக்கை என்னவெண்டால் இந்தப்பக்கமும் சரி, அந்தப்பக்கமும் சரி கூட நிக்கிறதுகள் தான் இவ்வளவுக்கும் கால்…!

"டிசைன" அப்பிடிப் பாருங்கோ… நான் போன முறையும் சொன்னனான்… ரெண்டு பக்கத்தாலையும் மும்மூண்டு பேரைப் போட்டுத் தள்ளினா "தமிழ்த் தேசியம்" உருப்பட வாய்ப்பிருக்கு… இல்லாட்டி எங்கட ஆக்களை வைச்சு அரசியல் செய்து போட்டு "பெப்பே" எண்டுட்டு எல்லாரும் போய்க் கொண்டிருப்பினம்.

நாங்கள் நிண்ட இடத்திலேயே நிண்டு திரும்பவும் எவராவது உணர்ச்சி அரசியல் செய்து கொண்டு வர, கூட்டம் போட்டுக் கொடி பிடிச்சுக் கொண்டு நிக்க வேண்டியது தான்…

கடைசியா… ஒண்டு மட்டும் சொல்லுறன், சிங்களவர் ஆரும் எங்களுக்குத் தீர்வு தரப் போறதில்லை… அதுக்காக எங்கட தரப்பில வேட்பாளராப் போடுற அளவுக்குப் பலமும் இல்லை…

"அந்தக் காலத்தில பொன்சேகா எண்டு சொல்லி எங்களப் பேக் காட்டினவை இப்ப "கிரிக்கெட்" விளையாடக் கூடத் திரியினம்… பக்கத்து வீட்டுக் காரர் சொல்லினம் எண்டதுக்காகப் பொது வேட்பாளரைத் தூக்கி ஆடுகினம்.. ஆக மொத்தத்தில எங்களுக்கெண்டு எதுவும் நடக்கப்போறதில்லை…

அவதானம் மக்களே!

**- நரமுனி -**

# ரி-20 உலகக்கிண்ணத்தொடர் இலங்கை அணி வெளியேறும்?




ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை மற்றும் நேபாள அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது மழை குறுக்கிட்டதன் காரணமாக போட்டியைக் கைவிடுவதற்கு நடுவர்கள் தீர்மானித்தனர்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான போட்டி அமெரிக்காவின் புளோரிடாவில் இன்று நடைபெறவிருந்தது. நாணயச் சுழற்சிக்கு முன்னர் இருந்தே தொடர் மழை பெய்து வந்தது. நீண்ட நேரமாகக் காத்திருந்தும் மழை குறையாததன் காரணமாக, போட்டியை நடத்த முடியாத நிலை ஏற்பட அதனைக் கைவிடுவதற்கு நடுவர்கள் தீர்மானித்தனர்.

இதன் காரணமாக இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வீதம் வழங்கப்பட்டது. இந்தநிலையில் மூன்று போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் கூட வெற்றி பெறாத இலங்கை அணி டி குழுவின் புள்ளிப் பட்டியலில் இறுதி இடத்திலேயே உள்ளது.

டி குழுவிலிருந்து தென்னாபிரிக்கா அணி சூப்பர் 8 சுற்றுக்கு தெரிவாகியுள்ள நிலையில் இலங்கை அணிக்கு ஒரு போட்டி மாத்திரம் மீதமிருக்கின்ற காரணத்தினால் சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

குழு டி புள்ளிப் பட்டியல் வரிசையில் பங்களாதேஷ் 2 புள்ளிகளுடனும், நெதர்லாந்து 2 புள்ளிகளுடனும், நேபாள அணி ஒரு புள்ளியுடனும் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களில் உள்ளன. இந்த மூன்று அணிகளுக்கும் இரண்டு போட்டிகள் மீதமிருக்கின்றன. (04)

# பாதுகாப்புத்துறைத் தலைவர்களின் சேவைக்காலம் டிசம்பர் வரை நீடிப்பு

அனைத்து பாதுகாப்புத் திணைக்களத் தலைவர்களின் சேவைக் காலத்தையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் இறுதி வரை நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தீர்மானத்தின் அடிப்படையில் பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தின் மூலம், டிசம்பர் மாதத்திற்கு முன்னர் சேவைக் காலம் முடிவடையவுள்ள முப்படைத் தளபதிகள் மற்றும் அனைத்து பாதுகாப்புத் தளபதிகளின் பதவிகளும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளன.



ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை நாட்டின் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை இலகுவாகப் பேண முடியும் என்பதற்கவே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரென-32)

# அமெரிக்க ஜனாதிபதி பைடனின் மகன் குற்றவாளி எனத் தீர்ப்பு!

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹன்டர் பைடனை (Hunter Biden) குற்றவாளியாக அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

போதைப்பொருள் பழக்கம் இல்லை என பொய் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு துப்பாக்கி வாங்கியமை உட்பட மூன்று வழக்குகளில் ஹன்டர் பைடன் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் ஹன்டர் பைடனுக்கு அதிகபட்சமாக 25 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அந்நாட்டு சட்ட வல்லுநர்கள் தெரிவித்தனர்.

எனினும், முதல்முறை குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படுமா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அரசு உரிமம் பெற்ற துப்பாக்கி வியாபாரியிடம், தான் போதைப்பொருள் பயன்படுத்தாத நபர் என்ற விண்ணப்பத்தை ஹன்டர் பைடன் கடந்த 2018 ஆம் ஆண்டு சமர்ப்பித்து துப்பாக்கியை பெற்றுள்ளார்.

# முட்டை இல்லாமல் வட்டிலப்பம் உண்ணத் தயாராக வேண்டாம்!

## ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன உறுப்பினர் தெரிவிப்பு



'முட்டை இல்லாமல் வட்டிலப்பம் உண்ண தயாராக வேண்டாம் ' என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு எவ்வாறு தெளிவுபடுத்துவது என்பது தொடர்பாக கொழும்பில் ஹோட்டலொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி உறுப்பினர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கச் செல்லும் போது அரசாங்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என மக்கள் கேட்பதாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன் போது குறிப்பிட்டுள்ளனர். இதற்கு பதிலளித்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து தெரிவாகி தற்போது ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே என தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பில் கட்சி ரீதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் ஆகையால், ரணில் விக்கிரமசிங்கவை அரசாங்கத்தின் வேட்பாளர் என வெளிப்படையாக அறிவிக்க முடியாதுள்ளது எனவும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்ட போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 'முட்டை இல்லாமல் வட்டிலப்பம் உண்பதற்கு தயாராக வேண்டாம்' என ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அறிய வருகின்றது.

இது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஒருவரிடம் கேட்டபோது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க இதுவரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்த வொரு அறிவித்தலையும் விடுக்கவில்லை என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரென-31)

# வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி!



எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் தொழில்துறை மற்றும் கனரக வாகனங்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்டம் கட்டமான வாகன இறக்குமதிக்கான அனுமதியின் கீழேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருட தொடக்கத்தில் வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க முன்மொழிவின் கீழேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் மற்றும் கனரக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியதன் பின்னர் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

வாகனங்களை படிப்படியாக மீண்டும் இறக்குமதி செய்யும் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படவுள்ள அடுத்த வகை வாகனங்கள் சிறிய ரக மோட்டார் வாகனங்கள் எனவும், சொகுசு மற்றும் அதி சொகுசு வாகனங்களுக்கு கடைசியாகவே அனுமதி வழங்கப்படும் எனவும் அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கையிருப்பின் படி ஒரு வருடத்தில் இறக்குமதி செய்யப்படும் அதிகபட்ச வாகனங்களின் எண்ணிக்கை குறித்து மத்திய வங்கியிடம் அரசாங்கம் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் அறியவருகின்றது. இருப்பினும், அரசாங்க ஊழியர்களுக்கு வரி அறவிடப்படாத திட்டங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பது குறித்து அரசாங்கம் உடனடியாக பரிசீலிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரென-29)

# சாய்ந்தமருது மருதம் கலைக்கூடலின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா



(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் சட்டத்தரணி அசாம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பாரம்பரிய கலைகளான ரபான், மொல்லடியுடன் முஹம்மதியா கலைமன்றத்தினால் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வு மன்றத்தின் தலைவர் அஸ்வான் சகாப் மௌலானாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

மர்ஹூம் சாகாப் மௌலானா அவர்களின் வாழ்க்கை வரலாறு சம்பந்தமாக கவிஞர் அலிக்கானின் தெளிவுரை, கவிப்புனல் ஏ.எம்.ஏ.அஸீஸின் கவிதை, முஹம்மதியா கலைக்கூடல் மன்றத்தின் தலைவர் அலாவுதீனின் பொல்லடியும் மேடையில் அரங்கற்றப்பட்டன. அத்தோடு பிர்லியன்ட் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்திருந்தன.

இந்நிகழ்வில் தேர்தல்கள் மறுசீரமைப்பு ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம் பிரதம அதிதியாகவும், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எம்.ஆசிக், அம்பாறை மாவட்டப் பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் மாணவர்களுக்கு பாதுகாப்புச் சீருடைப்பொதி




(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பணிமனையினால் வழங்கப்பட்ட பாடசாலை மட்டத்திலான போக்குவரத்து பாதுகாப்பிற்கான சீருடைப் பொதிகள் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வகையில், திருக்கோவில் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு சீருடைப் பொதி வழங்கும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.உதயகுமார் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் – (கல்வி அபிவிருத்தி) ஏ. நசீர் கலந்து கொண்டார்.

# அட்டாளைச்சேனையில் கலாசார மண்டபங்கள் திறந்து வைப்பு



(எம்எப்.நவாஸ்)

ஐஎஸ்ஆர்சி நிறுவனத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கலாசார மண்டபங்கள் (பள்ளிவாசல்கள்) 2024/06/10 நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன், அவை அறபா வித்தியாலயம் மற்றும் ஸஹ்றா வித்தியாலயம் ஆகியவற்றிற்கு கையளிக்கப்பட்டன.

கலாசார உத்தியோகத்தர் எம் எஸ். ஜௌபரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏஎம்.ரஹ்மத்துல்லாஹ் ( நழீமி), கௌரவ அதிதிகளாக கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்எச்எம்.ரஸ்மி, ஐஎஸ்ஆர்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு ஆலோசகர் ஏஎல்.ஜுனைட் (நழீமி), விசேட அதிதிகளாக அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி ஐம்எஸ்.ஜுனைதீன், அம்பாறை மாவட்ட சமுதாயம் சார் செய் திருத்த உத்தியோகத்தர் எம்எஸ்எம்.இக்ராம், நீதிமன்ற ஆணையாளரும் உத்தரவு பெற்ற நில நில அளவையாளரும் இந்த திட்டத்தின் ஆலோசகருமான எம்எஸ்எம்.அன்சார், ஊர்ப் பிரமுகர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# அம்பாறை மாவட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் சஜித் முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு



அம்பாறை மாவட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை ஏற்றுக் கொண்டு சுமார் 30 பேர் இணைந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி இணை தொகுதி அமைப்பாளரும் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் இணைப்புச் செயலாளரும் ஐக்கிய இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் விடுத்த அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்துக்குரிய மொட்டுக் கட்சியின் பிரதிநிதிகளான தமன பிரதேச சபையைச் சேர்ந்த முன்னாள் உப தவிசாளர் வெனுர பிரகீத், நாமல் ஓய பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் டபிள்யூ. விஜேவந்த, உகன பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் ரவீந்ர ருபசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் அமைச்சரவை ஊழியர்கள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக கசும் உட்பட மொட்டுக் கட்சியினுடைய உள்ளூராட்சி சபைகளின் வேட்பாளர்கள், கிராமமட்ட தலைவர்கள் என சுமார் 30 அங்கத்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் இணைந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருக்கும் சஜித் பிரமதாஸவை வெற்றி பெறச் செய்யும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவோம் என்று அவர்கள் உறுதியாகக் கூறியுள்ளனர்.

அது மாத்திரம் இன்றி அம்பாறை மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் அங்கத்துவம் வகிப்பவர்களையும் சஜித் பிரேமதாஸவுடைய வெற்றிக்காகக் களப்பணியில் ஈடுபட முயற்சிப்பதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

உண்மையில் இந்தச் செயற்பாடுகளால் எதிர்கால ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அமைப்பாளர் வினோகாந்த் இதன்போது தெரிவித்தார்.

எனவே, ஏனையவர்களும் சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஜனாதிபதிப் பதவியோ, பிரதமர் பதவியையோ ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குறை கூறியவர்கள் அனைவருக்குமான ஒரு செய்தியாக தற்போது இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் வாக்குகளைச் சஜித் பிரமதாஸவுக்கு வழங்கி அவர்களை ஜனாதிபதியாக்கும் படியாகவும், மேலும் எமது நாட்டில் காணப்படக்கூடிய அடிப்படைத் தேவைகள் பொருள் விலை உயர்வுகள் ஏழைகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் போன்ற காரியங்களில் இருந்து நாங்கள் அடுத்த கட்ட நகர்வை நோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியா வரும் பட்சத்தில் நாட்டு மக்களுக்கான சுபீட்சமான வாழ்வு நிச்சயம் மலரும் என்பதனையும் வினோகாந்த் வலியுறுத்தியுள்ளார். (05)

# வீதியில் நடந்து சென்ற குடும்பஸ்தர் டிப்பர் வாகனம் மோதியதில் மரணம்

## நுணாவில் பகுதியில் அதிகாலை துயரம்



யாழ்ப்பாணத்தில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவரை டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த நபர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய இளம் குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அந்த நபர் இன்று அதிகாலை வேளை யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ்சாலையில், நுணாவில் பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்த வேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது.

அதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ள நிலையில், சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)






## விஜயதாச ராஜபக்ஷ மீதான தடையுத்தரவு நீடிப்பு !



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக விஜயதாச ராஜபக்ஷ செயற்படுவதைத் தடுக்கவும், கட் சியின் உறுப்பினராக செயற்படுவதைத் தடுக்கவும் அவருக்கு நீதிமன்றம் பிறப்பித்திருந்த தடை உத்தரவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சந்திம எதிரிமான்ன உத்தரவிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா, பதில் பொருளாளர் லசந்த அழகியவன்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த புகார் மனுவை பரிசீலித்திருந்த கூடுதல் மாவட்ட நீதிபதி, கடந்த 27 ஆம் திகதியன்று இந்தத் தடை உத்தரவை முதன்முறையாக பிறப்பித்திருந்தார். மேற்படி புகார் தொடர்பாக ஆட்சேபனைகளை தெரிவிக்க கூடுதல் நாட்கள் அவகாசம் அளிக்குமாறு, பிரதிவாதி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கூடுதல் மாவட்ட நீதிபதி, மனுவை எதிர்வரும் 25 ஆம் திகதி மீண்டும் கவனத்திற் கொள்வதாக உத்தரவிட்டார். (ரென-36)

## ரஷ்யா இராணுவத்தில் இலங்கையர் ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டார்கள்

### ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் உறுதி

ரஷ்யாவில் இராணுவ சேவைக்கு இலங்கையர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லெக்ரோட் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் உறுதியளித்துள்ளார்.

'பிரிக்ஸ்' வெளியுறவு அமைச்சர்கள் அமர்வில் பங்கேற்பதற்காக ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ரஷ்ய இராணுவத்துடன் இணைந்துள்ள இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தியதுடன், இதில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் தலையிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதற்கமைய, எதிர்வரும் 26 - 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து இணக்கப்பாட்டுக்கு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரென-37)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!